# வட்டுக்கோட்டை பிரதேசத்தின் பாரம்பரிய கலை வடிவமான குதிரையாட்டம்

இ.சஜித்,
கிழக்குப்பல்கலைக்கழகம்,
இலங்கை

## குதிரையாட்டம் ஓர் அறிமுகம்

தமிழ்நாட்டு நாட்டுப்புறக்கலை வடிவங்களில் குதிரையாட்டம் ஒன்றாகும். இக் கலையின் பிறப்பு இந்தியாவாகவே கொள்ளப்படுகிறது. இக் கலையானது 'மராட்டியர் காலத்தில் தோன்றியதாகவும் மராட்டியர் காலத்தில் தான் முதன் முதலாக தஞ்சைக்கு இக் கலையானது கொண்டு வரப்பட்டதாகவும் வரலாறு கூறுகிறது. தமிழ் மக்களின் நாடி துடிப்பாக கிராமியக் கலைகள் விளங்கி வருகின்றன. ஆனாலும் இன்று அவை மெல்ல அழிந்து வருகின்றன. கலைகள் மறைந்து போனாலும் மண்ணிண் அடையாளங்களாக என்றும் அவை போற்றப்படுகின்ற கலைகளாகவே காணப்படுகின்றன. கிராமத்தில் கோயில் திருவிழா என்றால் கரகாட்டம், காவடிகாட்டம், குதிரையாட்டம், பொம்மலாட்டம் என்று கிராமிய நிகழ்ச்சிகளுடன் சினிமா ஆடல் பாடல் நிகழ்ச்சிகளும் முக்கிய இடத்தைப் பிடித்த வருகின்றன. எவ்வாறாக இருப்பினும் குதிரையாட்டத்திற்கான தனி மதிப்பு காணப்படுகின்றது. குதிரையாட்டம் என்பது பொய்க்கால் குதிரையாட்டம், புரவியாட்டம், வெண்புரவியாட்டம், பரியாட்டம் என்று பலவாறாக அழைக்கப்படுகிறது. கிராமத்து மக்களிடம் குதிரைக்குரிய தனித்தனியான பெயர்களும் வழக்கிலிருந்ததாக நூல்கள் கூறுகின்றன. 'தென்பொதிகைக் குதிரை, சீமைக்குதிரை, வடமுனைக்குதிரை, வங்காளக்குதிரை, தாண்டகக்குதிரை, வாதவூர்க்குதிரை போன்ற பெயர்கள் இருந்ததாக கூறப்படுகிறது.

மிகவும் அழகான 'குதிரைக்கூடு அணிந்து அதன் மேல் சவாரி செய்வது போன்ற பாசங்கு செய்து ஆடப்படுவதால் குதிரையாட்டம் என்றும் பொய்யான குதிரையினை அணிந்து ஆடுவதால் பொய்க்கால் குதிரையாட்டம் எனவும் அழைக்கப்படுகிறது. குதிரையாட்டம் தோற்ற வரலாற்றினை நோக்குவோமாயின் '1910களில் நாகப்பட்டினத்தில் அல்லாப்பிச்சை என்பவர் "அப்பாஜ்" என்ற நாடகத்தில் அப்பாஜி மன்னன் குதிரை மீது வருவதாக ஒரு காட்சி வருமென்றும் அக்காட்சிக்காகத் திருவையாறு இராமகிருஸ்ண நாயுடு என்பவர் குதிரைக்கூடு உருவாக்கியதாகவும் கூறப்படுகிறது. நாடகக் கலைஞர்களுக்கு வேண்டிய ஒப்பனைப் பொருட்களைச் செய்து வாடகைக்கு கொடுத்து வந்தார். முதலில் கல்யாண முருங்கை மரத்தால் குதிரைமுகம் செய்து அதில் வண்ணம் தீட்டி கண்ணாடிகளைப்பதித்து மூங்கில் கம்புகளால் செய்து அலங்கரிக்கப்பட்ட குதிரைக்கூட்டல் இம் முகத்தை இணைத்து குதிரை ஆக்கினார்.' இவ்வாறு நாடகத்தின் காட்சியாக உருவாக்கப்பட்ட குதிரை பின்னர் அக்கலைஞரின் முயற்சியினால் தனிக் கலையாக வளர ஆரம்பித்தது. இக் குதிரையானது கி.பி 1900க்கும் 1905க்கும் இடையில் உருவாக்கப்பட்டிருக்கப்பட்டதாக கூறப்படுகிறது

'ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணப் போக்குவரத்தில் குதிரை வண்டிகளும் மாட்டுவண்டிகளும் சிறப்பிடம் பெற்றிருந்ததாகவும் உயர்ந்த அரசாங்க உத்தியோகத்தாகளிடம் குதிரை வண்டிகள் இருந்ததாகவும் இதன் விளைவாக குதிரையாட்டம் திருவிழாக்களிலே நிகழ்த்தப்பெற்று இக் கலை தோற்றம் பெற்றதாகவும் வரலாறு கூறுகின்றது.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரை இப்பொய்க்கால் குதிரையாட்டம் முற்றிலும் பொழுது போக்கின் அடிப்படையில் தோன்றிய ஒரு கலையகாவே வழங்கி வந்துள்ளது. இக் குதிரையாட்டம் பற்றி

பல்வேறுபட்ட வரலாறுகள் கூறப்படுவதைக் காணமுடிகிறது. அந்த வகையில் 'சங்கமருவிய காலத்தில் கூறப்படுகின்ற சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடியதாக கூறப்படும் பதினொருவகையான ஆடல்கள் மரக்கால் கூத்து குறிப்பிடத்தக்கது. வஞ்சத்தால் பாம்பு, தேள் முதலிய விடப்பூச்சிகளாக உருவெடுத்துத் தனக்கு இன்னலை விளைவித்துக் தன்னை கொல்லக் கருதிய அரக்கர்களின் செயலை உணர்ந்து துர்க்கை தன் கால்களில் கட்டையைக் கட்டிக் கொண்டு அவர்கள் மிதிபட்டு மடியுமாறு ஆடிய ஆட்டமே மரக்கால் ஆடல் ஆயிற்று. இவ்வாறு சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்படும் மரக்காலாடல் இன்று பொய்க்கால் குதரையாட்டமாக மாறிவந்துள்ளதாக கூறப்படுகிறது.

உதாரணம் - ''மாயவளாடிய மரக்காலாடலும்''

'தமிழ் நாட்டில் பன்னெடுங்காலமாக மரக்காலாடல் வழக்கில் இருந்து வருகிறது. ஆனால் பொய்க்குதிரைக் கூட்டைச் சுமந்து கொண்டு ஓடியதற்கான சான்றுகள் தொல்காப்பியத்தல் காணப்படுவதாக கூறுவதும் குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியத்தில் அகத்திணை இயலில் பெருந்திணைக்கு இலக்கணம் கூறும் நூற்பாவில் தலை மகன் தான் விரும்பிய பெண்ணை மணக்கப் பெண்ணின் பெற்றோர் தடை விதித்த போது பனை ஓலையில் குதிரை போல் உருசம் செய்து அதனை உடலில் தாங்கிக் கொண்டு ஊர்த் தெருக்களில் வந்து தான் விரும்பம் பெண்ணைத் தனக்குக் கட்டி வைக்கக் கோரிய செயல் 'மடலேறுதல்' என்னும் பெயரால் வழங்கப்பட்டுள்ளது. இது தொல்காப்பியத்தில் 'ஏறிய மடல் திறம்' என்று பேசப்படுகிறது. ஆனால் காலில் கட்டை கட்டிப் பொய்க்குதிரைக் கூட்டைச் சுமந்து ஆடலாக ஆடப்படுவதற்கான சான்றுகள் எவையும் கிடைக்கவில்லை. ஆனால் இன்றைக்ககு 85 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ் நாட்டில் இப் பொய்க்கால் குதிரையாட்டம் ஆடப்படுவதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. 114 உயரமான கட்டைகளைக் கால்களில் கட்டிக் கொண்டு, சாக்கு, செய்தித்தாள், காடாத்துணி, புளியங்கொட்டைப் பசை, பிரம்பு, இரும்புத்தகடுகள் ஆகியவற்றிலான பொய்க்குதிரைக் கூட்டினைச் சுமந்து ஆடுவதே குதிரையாட்டம் எனக் கூறப்படுகிறது.

## வட்டுக்கோட்டைப் பிரதேசத்தினுள் குதிரையாட்டம் நுழைந்த விதம்

வட்டுக்கோட்டை பிரதேசத்தில் வாழ்கின்ற கலைகள் வட்டுக்கோட்டையிலே பிறக்கவில்லை. கலைகளின் ஒற்றுமைத் தன்மையோ என்னவோ இவை வட்டுரைத்தேடி வந்துவிட்டன. அந்த வகையில் வட்டுரில் நுழைந்த கலைகளில் ஒன்றாக குதிரையட்டம் காணப்படுகிறது. இக் கலை தோற்றம் பெற்றமைக்கான வரலாறு பற்றி பின்வருமாறு நோக்குவோம். இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த வட்டூர் மக்கள் 'செல்வச்சந்நிதி ஆலயத்தின் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர்களாக காணப்பட்டனது. அங்கு நடைபெறும் விழாக்களுக்கு இவர்கள் செல்வது ஒரு வழமையான செயற்பாடாக காணப்பட்டன. இதனை வழக்கமாக கொண்டவர்தான் அருளப்பலம். செல்வச்சந்நிதி கோவிலில் ஒரு வகைச்சாதியினர் திருவிழாக்களில் முகத்தில் பூச்சுப் பூசிக்கொண்டு குதிரைகளைக் கொண்டு உலா வருவார்கள். ஆனால் இவர்கள் காலத்தில் ஆடுவதில்லை. சில சமயங்களில் மட்டுமே ஆடுவார்கள். அங்கேயே இதனை முதன் முதலில் கண்ட ''வட்டூர் அருளம்பலம்'' என்பவர் இவ் ஆட்டத்தின் மீது மிகுந்த ஆர்வம் கொண்டு தனது ஊரான வட்டூருக்கு கொண்டு வர வேண்டும் என எண்ணி முதன் முதலில் 1947 ஆண்டு கொண்டு வரப்பட்டதாக கூறப்பட்டது.

ஒவ்வொரு கிராமியக் கலைகளும் தெய்வத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றுகின்றன. அவ்வாறே இக் கலையும் ஒரு கால கட்டத்தில் 'அம்மை, பொக்கிளிப்பான், சின்னமுத்து, கூவைக்கட்டு, கண்நோய் போன்ற வியாதிகளினால் பீடிக்கப்பட்டு வட்டுக்கோட்டை மக்கள் மிகுந்த துன்பப்பட்டார்கள் இவ் வருத்தமெல்லாம் அம்பாள் சீற்றத்தினால் ஏற்படுவதாக எண்ணி அம்பாள் அடியினைத்தொழுது அவள் காது குளிர நேர்த்தி வைத்து கால்களில் சதங்கை கட்டி கூத்து, காவடி, கரகாட்டம் போன்றவற்றோடு இவ் குதிரையாட்டம் போன்ற கலைகளை ஆட ஆரம்பித்தனர். வட்டூர் மக்களின் நம்பிக்கையின் வைராக்கியத்தால் மேற்கூறப்பட்ட நோய்களும் குணமாகியதாக கூறப்படுகிறது இக் கலையின் காரணமாகவே பாரம்பரிய கலைகளின் ஆறாத தொடர்ச்சியாக நிலவுகின்றது.

## குதிரையாட்டத்திற்கு முன்பு இடம் பெறும் வழிபாடுகள்

அநேகமான எந்தவொரு கலையும் அரங்கேறும் போது கடவுள் வழிபாடு இடம் பெறுவது வழக்கம். நடன நிகழ்வின் போது நடராஜப்பெருமானை அரங்கில் வைத்து வழிபட்ட பின்னரே மிகுதியான தங்களுடைய ஆட்டத்தை தொடங்குவர். வேறு சில கலைகள் தங்களது நம்பிக்கைக்கு ஏற்றபடி நிகழ்வு தொடங்குவதற்கு முன்னர் ஆலயங்களில் சென்று நமது முறைக்கேற்ப வழிபட்டு பின் கலை நிகழ்வு தொடங்குவது வழக்கம்.

'குதிரையாட்ட நிகழ்வு ஒன்று இடம் பெறுவதற்கு முன்னர் அவர்களுடைய குலதெய்வமாக வழிபட்டு வரும் அம்மன் கோவிலுக்குச் சென்று கற்பூரம் கொழுத்தி தாம் நிகழ்த்தப் போகும் கலையானது எந்த விதமான இடையூறுகளும் இன்றி இனிதே நடைபெற வேண்டும் என கடவுளிடம் வேண்டியும், தம் கலைக்கான உத்தரவினை வேண்டுதலின் பொருட்டும் கடவுளை வணங்கி முதலில் பாடலைப் பாடி கோயிலைச் சுற்றி நடனம் ஆடிவருகின்றனர். அப் பாடல் பின்வருமாறு :

''வாசலிது வாசலிது மாரியம்மன் வாசலிது
தேசமெல்லாம் கிடுகிடுக்க – எங்கள் மாரியம்மன் வாசலிது.'' ................

எனும் பாடலைப் பாடி வலம் வருவர். அதன் பின்னரே தாம் கலை நிகழ்த்து இடத்திற்கு செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

## குதிரையாட்டம் ஆட்டமுறை

### 01. இரட்டைத் தாளம்

சொற்கடடு – 'தா தெய்'

'தா' என்று கூறும் போது வலது காலைத் தூக்கி வலது குதி நிலத்தில் பட வைத்து 'தெய்' என்று சொல்லும் போது நிலைக்கு கொண்டு வந்து வைத்தல் வேண்டும். இவ்வாறே இடது காலையும் இச் செயற்பாட்டிற்கேற்ப முன்னர் செய்வது போல் செய்தல் வேண்டும்.

### 02. மூன்றடித்தாளம்

சொற்கட்டு – 'தெய் தா தெய்'

கூட்டுக்காலுடன் தொங்கி வலது காலை வலப்பக்கமாக வைத்து இடது காலை பின்புறமாக வைத்து ஆடி மறுபடியும் கூட்டுக் காலுடன் தொடங்கி இடக் காலை பக்கத்தில் வைத்து வலது காலை பின்புறமாக கொண்டு குத்தி இன்னொரு முறை கூட்டுக்காலுடன் தொங்கி ஆடுதல். இவ் ஆட்டத்தினை முதலில் நிலையாய் நின்று ஆடிப் பின் அசைந்து முன்னும் பின்னம் வட்டமாய் வேண்டும்.

**03. செச்சை**

சொற்கட்டு – 'தித் தா தித் தித் தெய்'

'தித் தித்' என்று சொல்ல காலைத்தூக்கி வலது காலின் குதியை முன்புறமாக வைத்து அதே வேளை இடது காலின் பாதத்தை சுற்றி பூமியுடன் வைத்த பின் 'தா' எனச் சொல்ல வலது பாதம் முழுதும் பூமியைத்தொட வைக்க வேண்டும். இவ்வாறே காலைமாற்றி 'தித் தித்' என்று சொல்ல இடது காலைத்தூக்கி இடது காலின் குதியை முன்புறமாக வைத்து அதே வேளையில் வலது காலின் பாதத்தினை சற்றுப் பூமியுடன் உயர்த்தி 'தெய்' என்று சொல்ல இடது கால்பாதம் முழுவதும் பூமியை முத்தமிடும் வகையாக வைக்க வேண்டும்.

**04. நாலடி**

சொற்கட்டு – ' கிடதததிமிதா''

கிட தத திமி தா' வலது காலை முன்பக்கமாக வைத்து பாய்ந்து சற்றுக் குனிந்து குதிரையின் தலைப்பாகத்தினை முன்புறமாகத்தாழ்த்த வேண்டும். 'கிட' என்று சொல்லும் போது வலது காலைத்தூக்கி முன்பக்கமாக பாய வேண்டும். 'திமி' என்னும் போது வலது காலை வைக்க வேண்டும் 'தா' என்னும் போது திரும்பவும் இடது காலை வைத்தல் வேண்டும்.

**05. ஐந்தடி**

சொற்கட்டு – 'தீந் திமித்தி தெய் தெய் தா'

'தீந்' என்று சொல்லும் போது வலது காலை நிலத்தில் குத்தி எடுத்து 'திமித்தி' கூறும் போது பக்கத்தில் அக்காலைப் பக்கத்தில் வைத்து மீண்டும் மறு காலைக் கொண்டு வந்து 'தெய்' என்று இன்னுமொரு முறை கூறும் போது வலது காலைப் பக்கத்தில் வைத்து மறுகாலைக் கொண்டு வந்து 'தா' என்று சொல்லும் போது காலை நிலத்தில் வைத்து முடிக்க வேண்டும்.

**06. கிலுக்கி**

சொற்கட்டு – 'தெய் தெய் தெய்'

இவ் ஆட்டம் வெகு விரைவாக வட்டவடிவமாக சுற்றியாட வேண்டும். 'தெய் தெய் தெய்' என்னும் போது நுனிப்பாகத்தையும் குதிப்பகுதியையும் மாறி மாறி படக்கூடியதாகவும் வலது காலை வைத்து அதற்கேற்ப இடது காலை வைத்து மாறி மாறி ஆட வேண்டும்.

**07. எட்டடித்தாளம்**

சொற்கட்டு – 'தீந்த தக தித்தி தீந்தத் தெய் ''

'தீந்த' என்று சொல்லும் போது வலது குதிக்காலை பக்கத்தில் வைத்து 'தக' என்று சொல்லும் அதே காலை கீழுக்கு வைத்து 'தத்தீ' என்னும் போது மேலும் வலது காலை பாய்ந்து நிலைக்கு கொண்டு வந்து இடது காலைப் பின்புறமாக வைக்க இதே மாதிரி வலது காலையும் அவ்வாறே வைத்து ஆடவேண்டும்.

**08. பத்தடித்தாளம்**

சொற்கட்டு – ‘தெய் தீந் தத்தா தக தெய் “

வலது காலை ‘தெய்’ என்னும் போது உதைத்து மேலாகத்தூக்க வேண்டும். பின்னர் ‘தீந்’ என்னும் போது அதே குதிக்காலை சற்றுப் பின்புறமாக வைத்து ‘தக’ என்னும் போது கீழ்ப்புறமாக வைத்து ‘தீந்தத்’ என்னும் போது நிலைக்கு கொண்டு வந்து வைத்து ‘தெய்’ என்னும் போது வலது காலுக்கு ஏற்ப இடது காலையும் நிலைக்கு கொண்டு வர வேண்டும். இவ்வாறே இடது காலிற் தொடங்கி வலது காலில் முடிக்க வேண்டும்.

**09. பஞ்சலாட்டம்**

சொற்கட்டு – ‘தீந்தீந்த தீந்தீந்த’

இடது கை குதிரையின் கடிவாளத்தைப் பிடிக்க வலது கையின் விரல்களை நன்கு விரித்து விரல்கள் ஒன்றோடொன்று பொருந்த வைத்து தாளத்திற் கேற்ப வலது கையினை அசைத்து கால்கள் இரண்டினையும் தாளத்திற் கேற்ப மாறி மாறிக் காலை கம்பீரமாய் நடத்தல் வேண்டும்.

**ஒப்பனை**

குதிரை ஆட்டத்திற்கான ஒப்பனையானது தனித்துவம் வாய்ந்ததாகும். ஆரம்பகாலங்களைப் பொறுத்தவரையில் குதிரையாட்டக் கலைஞர்கள் ‘முகத்திற்கு முத்து வெள்ளை மற்றும் முத்து சிவப்பு ஆகியவற்றை பூசிக் கொள்வர். ஆட்டம் ஆரம்பிப்பதற்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னரே தமது முகத்திற்கான ஒப்பனை செய்து கொள்வர். இவ் ஒப்பனை முறையானது ஆரம்பிக்கம் போது முதலில் முத்து வெள்ளையினை எடுத்து ஆமனக்கு எண்ணையுடன் கலந்து முகத்திற்கு போடுவர். பின்னர் அவை காய்ந்த உடன் முத்துச் சிவப்பு போடுவர். இவ்வாறு முகப்பூச்சு பூசிய பின்னர் கண்ணுக்கு சிரட்டைக் கரியையும், கள்ளிப்பாலையும் கலந்து மை தீட்டுவர். உதட்டுச்சிவப்பிற்கு சிலர் சிவப்புச் சாயம் பூசுவர் சில வேளைகளில் வெற்றிலை போடுவர்.

தற்காலத்தைப் பொறுத்த வரையில் இவர்களது ஒப்பனை முறை முற்றிலும் வேறுபட்டன. நவீனத்துவம் நாகரீகம் மாறிவட்டதால் அனைத்தும் மாறி விட்டன. முகத்திற்கு பான்கேக், பான்ஸ்ரிக் கொண்டு முகப்பூச்சு பூசுகின்றனர். பின்னர் கண்ணுக்கு மஸ்காரா, கார்ஜல், Eye liner போன்றவற்றை பயன்படுத்துகின்றனர். உதட்டுக்குடு Lip liner, Lip stick போன்றவையும் பயன்படுத்தி வருகின்றனர்.

**அணிகலன்களும், உடையமைப்பும்**

குதிரையாட்டம் ஆடும் கலைஞர்கள் தலையில் தலைப்பாகை அணிந்து கொள்வர். கழுத்தில் மாலையும், மார்பில் நெஞ்சுப் பெட்டியும் அங்குசமும் அணிந்து கொள்வர். இவர்கள் அணிந்திருக்கும் தலைப்பாகை அழகாக அலங்கரிக்கப் பட்டிருக்கும். இவர்களது உடையமைப்பானது பார்ப்பதற்கு அழகாகவும், கவர்ச்சிகரமாகவும் காணப்படும். பார்ப்பவர்களை ஈர்க்கக்கூடியதாக அமைந்திருக்கும். இவ் ஆட்டத்திற்கு ஆண் கலைஞர்கள் மாத்திரமே பங்கேற்கின்றனர். இவர்கள் கீழே பிஜாமாவும், மேலே பிறில் வைத்த சேட்டும் அணிந்து கொள்வர்.

இவர்களது இவ் உடையானது பார்ப்பவர்கள் கண்ணைக் கவரும் வண்ணம் பல நிறங்களில் அமைந்திருக்கும். அதாவது ‘மஞ்சல், நீலம், சிவப்பு, போன்ற ஒளிக்கும் நிறங்களில் வடிவமைக்கப்பட்டிருக்கும். இக் கலைஞர்கள் அணியும் உடையானது அவர்கள் கையில் வைத்திருக்கும் குதிரையின் அலங்காரத்திற்கு ஒத்ததாகவும், பொருத்தமாகவும் காணப்படும். மேலும் தாளம் சரியாக விழும் படி காலில் சலங்கை அணிந்து ஆடுவர். ஆரம்பகாலங்களில் கூத்து சலங்கையினையே பயன்படுத்தி ஆடி வந்தனர். பின்னர் தற்காலத்தில் பரத நாட்டியத்திற்கு பயன்டுத்தப்படும் சலங்கையினை பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பக்க வாத்தியங்கள்

குதிரையாட்டத்திற்கு பயன்படுத்தப்படும் பக்கவாத்தியங்கள் என்று நோக்கும் போது ஆரம்பகாலம் தொட்டு ஒரே வாத்தியங்களே பயன்படுதப்படுகின்றன. அதாவது ஆரம்பகாலத்தில் இருந்தே ‘கொந்தளம் எனப்படும் இரட்டை முகத்தோல், இரு விரல்கள், இரு நாதஸ்வரங்கள், கிடுகட்டி ,சல்லாரி, நட்டுவாங்கம், உடுக்கு போன்றவை பயன்படுத்தப்பட்டதாக வரவாறு கூறுகிறது. இருப்பினும் தற்போது இக் கலைஞர்கள் அவர்களது முறைப்படி வீணைப்பெட்டி, மத்தளம் , தாளம் போன்றன மட்டும் பயன்படுத்தும் முறையும் காணப்படுகிறது.

## குதிரை செய்யும் முறை

வட்டுக்கோட்டைப் பிரதேச பாரம்பரிய கலையான குதிரையாட்டத்திற்கு அவசியமான குதிரைகளை தாமே ஆக்கி வருவது குறிப்பிடத்தக்கது.‘களிமண் ஆற்றுமணல் இரண்டையும் கலந்து பிசைந்து ஒரு நாள் ஊறவைத்து அம்மண்ணால் குதிரை செய்து இருநாட்கள் உலர்த்த வேண்டும். நாளிதழ்களைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி நீரில் நனைத்துக் களிமண் குதிரையில் இடைவெளி இன்றி ஒட்டுவர். வக்ரம், மயில்துத்தம், மரவள்ளிக்கிழங்கு, மாவு மூன்றையும் நீரில் கலந்து நெருப்பில் பதமாகக் காய்ச்சி பசை தயாரித்து ஆற வைக்க ஆவண்டும். அந்தப் பசை தடவிய பேப்பர்களைச் குதிரை உருவத்தில் ஒட்டுவர் பின்னால் இவ்வாறு ஒன்றன் மது ஒன்றாக நான்கு முறை நாளிதழ்களை ஒட்டி வெயிலில் உலர்த்த வைக்க வேண்டும். பின்னர் மொத்தமான காடாத்துணியைத் துண்டுகளாக நறுக்கி பசை தடவி அதன் மீது ஒட்ட வேண்டும். அதனை வெயிலில் உலர வைக்க வேண்டும். பின் அதன் மீது மீண்டும் நான்கு நாளிதழ்களை ஒன்றன் மீது ஒன்று ஒட்டி உலர்த்தி அதன் மீது காடா துணியை ஒட்டி இரண்டு நாட்கள் மீண்டும் உலர வைக்க வேண்டும். பின்னர் குதிரையின் தலைப்பகுதியின் மையத்திலிருந்து பிளேற் கொண்டு அறுத்து எடுக்கப்படும். இப்போது காகிதம் மற்றும் துணியால் ஆண குதிரைக் கட்டு இரு பகுதிகளாக கிடைக்கும். பின்னர் அந்த இரண்டு பகுதிகளையும் மொத்த ஊசியால் மொத்த நூல் கொண்டு தைக்கப்படும். குதிரையின் உடலின் மையப்பகுதியில் ஆள் நுழையும் அளவு நீள் சதுரத்தில் துவாரம் அமைக்கப்படுகிறது.

‘பின்னர் குதிரை வாயின் மேற்புறமும் கீழ்ப்புறமும் தனித்தனியாக மேற்கூறப்பட்ட முறையில் உருவாக்குவர். பின்னர் அட்டையில் செய்த பசையில் மரத்தூளைக் கலந்து ஒரு பேப்பரை ஒட்டி அதன் மீது துணி ஒட்டி முன் உருவாக்கப்பட்ட குதிரையின் தலைப்பகுதிகளில் வைத்துத் தைக்க வேண்டும். இவ்வாறு வேலைகள் முடித்த பின்னர் பசையில் மரத்தூள் கலந்து குதிரையின்

பொக்கையான பகுதிகளில் பூசப்பட்டு அதன் மேல் துணி ஒட்டப்படும். தையல் போட்ட இடத்தின் மேல் காகிதம் ஒட்டி, அதன் மேல் துணியை ஒட்டி சாக்பவுடர் வஜ்ரம் கலந்து பூசினால் சிமெண்ட் பூசியது போல் இருக்கும். கண்ணுக்கு கண்ணாடிக் குண்டுகள் வைத்து ஒட்டப்படும். உடல் கட்டில் கண்ணாடிகள் மற்றும் தங்க நிறத் தாள் வைத்து ஒட்டி அழகுபடுத்தப்படும். தலைப்பகுதி, உடற்பகுதி இரண்டும் ஆணிகளால் இணைக்கப்படும். குதிரைக்கு வெள்ளை மற்றும் நீல வண்ணம் பூசப்படும். காது தனியாகச் செய்து வைக்கப்படும். கத்தாழை நாரால் வால் செய்யப்படும். குதிரைக்கூட்டின் கீழ்ப்புறம் மினுமினுப்பான செப்பு வண்ணத்துணி கட்டப்படும். குதிரைக்கூடு சுமார் 30kg எடை கொண்டதாக இருக்கும். இதனைத் தோளில் சுமப்பதற்கு வசதியாக மொத்தமான துணி நாடா குதிரைக்கூட்டின் மேற்பகுதியில் உள் நுழையும் துவாரத்தையொட்டிப் பொருத்தப்படும். இது ''கிராஸ் நாடா'' எனப்படும்.

'இவ்வாறு உருவாக்கப்பட்ட குதிரைக்கூட்டின் நடுப்பகுதியில் தலையை நுழைத்து மேலே வந்து அங்கு கட்டப்பட்டுள்ள வலப்பக்கத் துணிநாடாவை இடப்பக்கத்தோலிலும், இடப்பக்க நாடாவை வலப்பக்கத் தோளிலும் மாட்டிக்கொள்வர். இவ்வாறு மாட்டிக் கொண்ட பின்னர் இவர்களைப் பார்க்கும் போது மேல் அமர்ந்திருப்பது போன்று காணப்படும். இன்றைய காலகட்டத்தில் நவீன வளர்ச்சிப் போக்கு காரணமாக ஆரம்பகாலத்தில் அமைக்கப்பட்ட குதிரையில்லாமல் அதே அமைப்பு கொண்டதாக தங்களது வசதிக்கேற்றவாறு குதிரையமைத்து வருகின்றனர். 2006ம் ஆண்டிற்கு பிற்பாடு குதிரைகள் ஆக்கப்படும் விதம் சற்று வேறுபாடாக காணப்படுகின்றது. மண்ணினால் எடுக்கப்பட்ட குதிரை சிமெந்து மண்ணினால் குதிரை வடிவம் வார்த்தெடுக்கப்பட்டு நான்கு நாட்கள் காயவைக்கப்படுகிறது. பின்னர் அதன் மேல் 'பைவர் கிளாஸ்' களை ஒட்டி காயவைத்து குதிரை உருவம் வளர்த்தெடுக்கப்படுகிறது. ஆரம்பகால குதிரையை விடவும் சற்று ஆழமாக வர்ணபூச்சுக்கள் பூசப்பட்டு குதிரையாக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. குதிரை ஒவ்வொருவரினதும் கற்பனைக்கேற்ப ஒவ்வொரு விதமாகவே செய்யப்படுகின்றது. வட்டுக்கோட்டையில் கலைஞர் நாகப்பு குதிரைகள் செய்வதில் திறமையானவராகக் காணப்படுகின்றார். இவரைப் போல இவருடைய மகனும் இதில் திறமை மிக்கவர் என்பதை கண்கூடாக பார்க்க முடிகிறது.

## குதிரையாட்டத்திற்கு வழங்கப்படும் பயிற்சிகள்

நாம் எந்தவொரு கலையிலும் அதன் பூரணத்துவத்தை அடைய வேண்டுமாயின் அவற்றினுடைய ஒழுங்கு முறைமையான பயிற்சிகளைப் பெறுதல் அவசியமாகும். பயிற்சிகள் ஒழுங்கு முறைமை இல்லாது அரங்கேற்றப்படுமாயின் அவை வெறும் தேக அப்பியாசங்களாக அமையுமே ஒழிய அதனுள் நாம் உரிய முறையிலான கலைத்துவத்தை எதிர்பார்க்க முடியாது. இதனைப் போன்றே குதிரையாட்டத்தினை மேற்கொள்ளும் ஒருவர் ஒழுங்குமுறையிலான சிறப்பான பயிற்சிகளை பெறுதல் அவசியம். அந்த வகையில் நாம் குதிரையாட்டத்திற்கான சில வகை பயிற்சிகளை இங்கே நோக்குவோம்.

i) ‘குதிரையாட்டத்தில் ஆடுவதற்கு யன்படுத்தப்படும் குதிரை மிகக் கனதியானதாகும். எனவே முதலில் குதிரையைத் தூக்கி தோளில் கொழுவி ஒவ்வொரு பக்கத்திற்கு ஒவ்வொரு விதமாக நின்று பழகுதல்.

ii) குதிரையாட்டத்தை ஆடும் போது காலில் போடப்படும் தாளமெட்டு சரியானதாக இருக்கவேண்டும். எனவே முதலில் காலில் எவ்வாறு தாளத்தை விழுத்துவது, ஒவ்வொரு மெட்டுக்கும் எவ்வாறு கால் அசைவுகளை மேற்கொள்வது போன்ற விடயங்களை படிமுறையாக பழகிக்கொள்வர்.

iii) குதிரையாட்டத்திற்கு அதற்குரிய தனித்துவமான பாடல்கல் உண்டு. இந்தப் பாடல்கள் அநேகமான குறிப்பிட்ட ஊரினுடைய பெருமைகளை எடுத்தியம்புவதாக காணப்படுவது வழக்கம். இந்தப் பாடல்களுக்கு ஏற்ப இயல்பான அசைவுகள் வரும் போதே குதிரையாட்டம் கவர்ச்சிமிக்கதாக மாற்றமடையும் எனவே இதற்கு கையசைவு, கண்ணசைவு என்பன அவசியமானதாகும். என்பதால் இவை தொடர்பான பயற்சிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

iv) குதிரையாட்டத்தினைப் பழகுவதற்கு வயதுகட்டுப்பாடு வரையறுக்கப்படவில்லை. எப்போது ஒரு கலைஞனுக் தான் குதிரையாட்டம் ஆடவேண்டும் என்ற ஆசை வருகின்றதோ அப்போதே பழகிக் கொள்ளலாம்.

**குதிரையாட்டத்தின் இன்றைய நிலை**

அன்றைய சூழலில் இவர்களது கலையையும், சமூகத்தையும் முன்னின்று வழிநடத்த வேண்டும் என்பதற்காக இக் கலைவடிவம் வளர்க்கப்பட்டது. அத்துடன் இக் கலை வடிவத்திற்கு தலைவர்களும் சிந்துபுரத்தில் காணப்பட்டனர். அவர்கள் தலைமையில் இக் கலை வடிவம் சிறப்பாக வளர்க்கப்பட்டு வந்தது. இன்று இக் கலையினை நிகழ்த்துபவர்கள் தங்கள் வருமானத்திற்காகவே செய்து வருகின்றனர். எனினும் இக் கலையின் எதிர் கால நலலத்தைக் கருத்தில் கொண்டு சழல கலையார்வமுடையவர்கள் தங்களால் முடிந்த உத்தியை குதிரையாட்டத்திற்கு செய்து வருகின்றனர். இன்றைய நிலையில் குதிரையாட்டக் கலைஞர்கள் சிந்துபுரத்தில் பல இடங்களில் வாழ்ந்தாலும் குறிப்பிட்ட சிலரே செய்து வருகின்றனர். இவர்களால் பெரும்பாலானார்கள் இக் கலை வடிவத்தை ஓர் பிழைப்பூதியத் தொழிலாகப் பார்க்கின்றார்களே தவிர கலையாக நோக்கவில்லை.

இக் குதிரையாட்டம் இன்று யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி போன்ற இடங்களில், கோவில் திருவிழாக்கள், பிரமுகர் வருகை, தேர்பவனி போன்ற விழாக்களில் போது ஆடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் பல்கலைக்கழகங்களில் இடம்பெறுகின்ற கலைவிழா நிகழ்வுகளிலும் முக்கியம் பெறுவதுடன் யாழ் பிரதேச செயலகங்கள், மாவட்ட பண்பாட்டு அலுவலகங்கள் போன்றன நடாத்தம் கலைநிகழ்வுகளிலும் குதிரையாட்டக் கலையானது ஆற்றுகையாக இடம் பெற்று வருகின்றது. ஆரம்ப காலங்களில் குதிரையாட்டத்திற்கு பல பக்கவாத்தியங்கள் இசைக்க, பாடல்பாட ஆடப்படடு வந்தது. இன்று மிருதங்கம் மட்டுமே வாசிக்கப்படுகின்றது. அதுவும் குறைவே காணப்படுகின்றன. பெரும்பாலும் சினிமாப் பாடல்கள், ஒலி நாடாக்களில் போட்டு அதற்கே இக் கலையினை ஆடிவருகின்றனர். மேலும், ஆரம்ப காலங்களில் குதிரையாட்டத்திற்கென கால் அசைவுகள் கலைஞர்டகளிடையே காணப்பட்டது. ஆனால் இன்று அது மருவி தமக்கு ஏற்றாற்போல் கால் அசைவுகளை போட்டு நிகழ்த்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குதிரையாட்டக் கலைஞர்கள் பரம்பரை பரம்பரையாக ஆடி வந்தனர். இன்று அப் பரம்பரையினர் கைவிட்டுவிட்டனர். மேலும், சிலர் அதனை வேறு கலைஞர்களைக் கொண்டு உழைப்பிற்காக இக் கலையினை ஆடிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே இக்கலையின் தொன்மை அழிந்துவிடாது பாதுகாக்க வேண்டியது அனைவரதும் தலையாய கடமையாகும்.

**ஆதார நூல்கள்**


1. திருமதி.கிறிஷானா.ஷார்மிளா,ரஞ்சித் குமார்ா,ஆய்வுககட்டுரை,2014,பக்.101
2. ஜெயராசா.சபா,கலாநிதி பேராசிரியர் ஆடற்கலை
3. மேலது,நூல்,பக்.74
4. நேர்காணல்,மீனேஸ்.நா,வியாபாரி,பக்.38
5. வலிகாமம் மேற்கு கலாச்சாரப் பேரவை பிரதேச செயலகம்,வட்டுகோட்டைக் கூத்தும் கிராமியக் கலைகளும்,2010,பக்.205
6. மேலது.பக்.219
7. சிலப்பதிகாரம்
8. இரதமநாதன்,ஆறு,நாட்டுப்புறக்கலைகள்,மெய்யப்பன்
9. நேர்காணல்,மீனேஸ்.நா,வியாபாரி,பக்.38
10. வலிகாமம் மேற்கு கலாச்சாரப் பேரவை பிரதேச செயலகம்,வட்டுகோட்டைக் கூத்தும் கிராமியக் கலைகளும்,2010,பக்.169
11. மேலது.பக்.205
12. மேலது.பக்.216
13. மேலது.பக்.198
14. இணையம்.https:kootharangam.wordpres.com20071124